கவன ஈர்ப்புகள்

(திரு ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்)

(30) விருதுநகர் நகராட்சியில் தண்ணீர் தட்டுப்பாடு

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, '' விருதுநகர் நகராட்சியின் குடிநீருக்கான கோடைக்கால நீர்த்தேக்கம் வறண்டு விட்டபடியால் குடிநீர் கிடைக்காமல் அப்பகுதி மக்கள் படும் இன்னல்கள் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விருதுநகர் நகராட்சியின் மக்கட்தொகை 70,000 ஆகும். அன்றாடம் இம்மக்களுக்கு 15 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப் படுகிறது. பருவமழை இன்மையால் ஆனைக் கோட்டம் என்ற இடத்திலுள்ள நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்துவிட்டது. எனவே மக்களுக்கு அன்றாடம் 7 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர்தான் வழங்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஒரு நபருக்கு தற்பொழுது ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நகராட்சியிலுள்ள 143 கைப் பம்புகளில் தற்பொழுது 92-ம், 43 மின் பம்புகளில் 36-ம் நன்கு வேலை செய்யும் நிலையிலுள்ளன. இவைகள் மூலமாக 4 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால் இந்த குடிநீர் கூட உவர்ப்பாக உள்ளது.

இந்நகராட்சியில், தற்பொழுது நிலவி வரும் பிரச்சனையை சமாளிக்க ஆனைக்கோட்டம் என்ற நீர்த்தேக்கத்தில் 10 ஆழ் துளைக் கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விருது நகருக்கு அண்மையிலுள்ள கௌசிக நதிக்கரையில் 5 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவைகளில் ஒரு ஆழ்துளை கிணறு தோண்டும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கிணறுகளின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பல வறட்சி நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதற்கான நிதி வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தவிர விருதுநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 138 இலட்சத்தில், ஒண்டிபுலிநாயக்கனூர் என்னுமிடத்தில் ஒரு நீர்த் தேக்கம் உருவாக்க ஒரு திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. விருதுநகர் நகராட்சியும் இதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற அரசின் அனுமதி பெற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கவன ஈர்ப்புகள்

இந்நகராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(முற்பகல் 10-40)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் விவரம் ஒன்றுமில்லை. ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்றால் எப்போது தோண்டுவது ? தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு உடனடியாக லாரிகள் மூலமாக சப்ளை செய்யவேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கைக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதா ?

அதேபோல் விருதுநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக 1 கோடியே 38 லட்ச ரூபாயில் ஒண்டிபுலிநாயக்கனூர் என்னுமிடத்தில் ஒரு நீர்த்தேக்கம் உருவாக்க குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி எடுத்துவருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் இருக்கிற விவரத்தைப் பார்த்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வெகு விரைவிலே செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும்.

(31) பொன்னேரி மாவட்ட முன்சீப் தாக்கப்பெற்றுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. உச்சி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி முன்சீப் கோர்ட்டில் நீதிபதியாக பணியாற்றும், சென்னைக் கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் வசிக்கும் பெரடரிக் கனகராஜ் அவர்கள் கடந்த 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாளன்று எண்ணூர் இரயில்வே நிலையத்தில் மின்சார இரயில் பெட்டிக்குள் அரிவாளால் வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால், அவரது குடும்பத்தார், ஏனைய நீதிபதிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம்